# விசுவாச ஜாம்பவான்கள்: யோசுவாவும் காலேபும்







பாடம் 8 நவம்பர் 22, 2025







“தேவவசனத்தை
உங்களுக்குப்
போதித்து உங்களை
நடத்தினவர்களை
நீங்கள் நினைத்து,
அவர்களுடைய
நடக்கையின் முடிவை
நன்றாய்ச் சிந்தித்து,
அவர்களுடைய
விசுவாசத்தைப்
பின்பற்றுங்கள்.”

(எபிரேயர் 13:7)

இந்த பத்து பேரை உங்களுக்கு தெரியுமா: சம்முவா, சாப்பாத், ஈகால், பல்த்தி, காதியேல், காதி, அம்மியேல், சேத்தூர், நாகபி மற்றும் கூவேல்? இவர்களுடைய “புகழ்” என்பது தேவனுடைய வல்லமையை அவநம்பிக்கை கொள்வதிலும், அதன் மூலம் அவருக்கும் ஒரு முழு தலைமுறையினருக்கும் மரணத்தை ஏற்ப்படுத்துவதிலும் இருந்தது. (எண். 14:36-37).



ஆனால் நீங்கள் இந்த இரண்டு பேரை பற்றி கேள்விப்பட்டிருக்கலாம்: யோசுவா மற்றும் காலேப். அவர்கள் உறுதியாக நின்றனர், தேவனுடைய வாக்குறுதிகளை நம்பினர், மேலும் அவை நிறைவேறுவதை காண உயிர் பிழைத்தனர் (எண். 14:38).

அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றி, அவர்களைப் போலவே தேவனைக்கொண்டு முடியாததை செய்ய முடியும் என்பதை நாம் எவ்வாறு முழுமையாக நம்புவது?



காலேபின் விசுவாசம்:

- சாத்தியமற்றதை சாத்தியமாக்குதல்.
- விசுவாசம் செயலில்.
- ஜோதியை அனுப்புதல்.

யோசுவாவின் விசுவாசம்.

விசுவாசத்தை எப்படி பெறுவது.



# காலேபின் விசுவாசம்

# சாத்தியமற்றதை சாத்தியமாக்குதல்

"ஆனாலும் என்னோடேகூட வந்த என் சகோதரர் ஜனத்தின் இருதயத்தைக் கரையப்பண்ணினார்கள்; நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்." (யோசுவா 14:8)




காலேப் என்ற பெயருக்கு "நாய்" என்று அர்த்தம். அவரது வாழ்க்கை நிரூபித்தபடி, அவர் அந்த பெயரை ஒரு அவமானகரமான வார்த்தையாக பெறவில்லை, ஆனால் அவரது விசுவாசத்தின் காரணமாக. மற்றவர்கள் விசுவாசமற்ற இடங்களில் அவர் உண்மையுள்ளவராக இருந்தார். மற்றவர்கள் தயங்கிய இடங்களிலும் அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தார்.

பத்து உளவாளிகள், நகரங்களை வெல்ல முடியாது எனவும் இராட்சதர்களை நாம் வெல்ல முடியாது என்று கண்ட இடத்தில், காலேப் நகரங்கள் கைப்பற்றப்பட்டதையும் இராட்சதர்கள் அப்பத்தை போல உண்ணப்படுவதையும் கண்டார்(எண். 13:28-33; 14:6-9). யோசுவாவுடன் (அவரை விட சற்று இளையவர்), கூட்டம் அவர்களை கல்லெறிய விரும்பிய போதும், அவர் தனது கருத்தில் உறுதியாக நின்றார் (எண். 14:10).

நம்மால் முடியாததை சாத்தியமாக்கக்கூடிய தேவன் மீது நாம் உறுதியான நம்பிக்கையை பேணுவதற்கு அவருடைய உதாரணம் நம்மை ஊக்குவிக்கிறது.

# செயலில் விசுவாசம்

"ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்; அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான்." (யோசுவா 14:12)






காலேபின் கூற்றுப்படி, மோசே ஒரு கணக்கை கேட்டபோது, "என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறுசெய்தி கொண்டுவந்தேன்." (யோசு. 14:7), மேலும் "நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்." (யோசு. 14:8). அவருடைய உண்மைத்தன்மையின்படியே, உளவுபார்த்த போது அவர் கால் பதித்த இடத்தை அவர் சுதந்தரித்துக்கொள்வார் என்று அவருக்கு வாக்களிக்கப்பட்டது (யோசு. 14:9).

காலேப் உளவாளியாக அனுப்பப்படும்போது அவர் 40 வயதாயிருந்தார். 5 வருட வெற்றிக்கு பின், அவர் இப்போது 85 வயதாயிருந்தார் (யோசு. 14:10). அவரது உடலும் மனதும் இன்னும் துடிப்புடன் இருந்தன, அவரது எண்ணங்கள் இன்னும் அப்படியே இருந்தன (யோசு. 14:11). வாக்குறுதியை கோரவும், அவரது வார்த்தைகள் வீண்போகவில்லை என்பதை நிரூபிக்கவும் நேரம் வந்துவிட்டது. தேவனுடைய உதவியுடன், அவர் இராட்தர்களை விழுங்கி அவர்களின் நகரத்தை கைப்பற்ற போகிறார் (யோசு. 14:12-14).



# ஜோதியை அனுப்புதல்

"கீரியாத்செப்பேரைச் சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு, என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன் என்று காலேப் சொன்னான்." (யோசுவா 15:16)



தனக்கு சொந்தமான ஒரு இடத்தின் ஒரு பகுதியை கைப்பற்றிய பிறகு, காலேப் தான் விட்டு செல்லும் மரபை பற்றி யோசித்தார். அவர் வைத்திருந்தது போல் அவரது சந்ததியினர் தொடர்ந்து தேவனை நம்புவார்களா?

தேவனை நம்பலாம் என்று அவர் நிரூபித்திருந்தார், இப்போது அதே நம்பிக்கை கொண்ட ஒருவரை கண்டுபிடிக்க விரும்பினார், அதனால் அவர் அவர்களுக்கு ஜோதியை கொடுக்கமுடியும்.



இந்த காரணத்தினால், தெபீர் என்றழைக்கப்படும் கீரியாத் செப்பேரை கைப்பற்றியவனுக்கு தன் மகளை அளிப்பதாக அவர் வாக்குறுதி அளித்தார் (யோசு. 15:15-16).



அவரது மருமகன் ஒத்னியேல் நகரத்தை வென்ற வலிமைமிக்க மனிதர், இஸ்ரவேலின் முதல் நீயாயதிபதி ஆனார் (யோசு. 15:17; நியா 3:9-11).

காலேபின் மகள் அக்சாளை மணந்த பிறகு, அவள் தன் தந்தையை வற்புறுத்தி, கைப்பற்றப்பட்ட பகுதியை விரிவுப்படுத்த அனுமதிக்க சொன்னாள் (யோசு. 15:18-19), இதன் மூலம் தான் காலேபுக்கு தகுதியான வாரிசு என்பதை நிரூபித்தாள்.



# யோசுவாவின் விசுவாசம்

"தேசத்தை அதின் எல்லைகளின்படி சுதந்தரமாகப் பங்கிட்டுத் தீர்ந்தபோது, இஸ்ரவேல் புத்திரர் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்குத் தங்கள் நடுவிலே ஒரு சுதந்தரத்தைக் கொடுத்தார்கள்." (யோசுவா 19:49)



ஒரு இளைஞனாக, யோசுவாவை மோசே தனது உதவியாளராக தேர்ந்தெடுத்தார். அவர் கீழ்படிதலுள்ளவராகவும், தைரியமுள்ளவராகவும், உண்மையுள்ளவராகவும், உதவி செய்பவராகவும், தேவனுடைய காரியங்களை நேசிப்பவராகவும் நிரூபித்தார் (யாத். 33:11). தன்னுடைய சொந்த பிரதேசத்தை கோரும் நேரம் வந்தபோது, எல்லா கோத்திரங்களும் தங்கள் சுதந்திரத்தை பெறும்வரை அவர் காத்திருந்தார், மேலும் அவர் "மீதமுள்ள பகுதியை" [திம்னாத்-சேரா] தேர்ந்தெடுத்தார்(யோசு. 19:50), இது சீலோவுக்கு அருகிலுள்ள ஒரு நகரமாகும், அங்குதான் ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டது.



அவருடைய கதையிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால்:

- விசுவாசம் உண்மைகளை புறகணிப்பதில்லை; அது வெறுமனே வெறுப்பட்ட புரிதலை வழங்குகிறது
- குறை கூறுவதற்கு பதிலாக, தேவனுடைய திட்டங்களை நம்பி, அதற்கு கீழ்படிய நாம் அழைக்கப்படுகிறோம்
- முழுமையாக கர்த்தருக்குள் நிலைத்திருப்பவர்களுக்கு ஆசீர்வாதங்கள் வரும்
- வாழ்க்கை அதன் அனைத்து பரிமாணங்களிலும் தேவனால் நிறுவப்பட்ட திட்டங்களின்படி வாழப்பட வேண்டும்
- தேவனுக்கு அருகில் வாழ்வது மதிப்புக்குரியது (சங். 84:10)

# விசுவாசத்தை எப்படி பெறுவது




"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்." (எபிரேயர் 12:1-2)

நமது நடத்தை நாம் பார்ப்பதை பிரதிபலிக்கிறது. "கண்ணாடி நியுரான்கள்" என்று அழைக்கபடுபவை கூட உள்ளன, அவை எதையாவது கவனிப்பதற்கும் அதை செய்வதற்கும் உள்ள வேறுபாட்டை மழுங்கடிக்கின்றன.



விசுவாசத்தின் மகத்தான கதாநாயகர்களின் முன்மாதிரியை கவனிக்க வேதம் நம்மை அழைக்கிறது, இயேசுவின் மீது சிறப்பு கவனம் செலுத்துங்கள், அவர்தான் உயர்ந்த முன்மாதிரி (எபி. 12:1-2).



விசுவாசவீரர்களான காலேப் மற்றும் யோசுவாவின் வாழ்க்கையை படிப்பதன் மூலம், அவர்களைப் போல நாம் தேவனை நம்ப வேண்டும்; அவர்களைப் போல தாழ்மையாய் இருக்க வேண்டும்; அவர்களைப் போல உண்மையாயும் தைரியமாயும் இருக்க வேண்டும்.

எவ்வாறு நாம் மாற முடியும்? வேதம் தெளிவாக கூறுகிறது: பரிசுத்த ஆவியானவரை நமக்குள் கிரியை செய்ய அனுமதிக்கும்போது (2 கொரி. 3:18). இதுதான் ஒரு செயல்படும் கிரியை. காலேபை போல செயல்படுவதற்கு மாற்றப்பட நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். நம்மை தேவனுக்கு ஜீவ பலிகளாக ஒப்புகொடுக்கப்படுவதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (ரோ. 12:1-2).

